©
GOVERNMENT OF TAMIL NADU
2021

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 2.40 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 382A] சென்னை, சனிக்கிழமை, ஆகஸ்ட் 28, 2021
ஆவணி 12, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு-2052

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

பொருளடக்கம்

**சட்டமுன்வடிவுகள்:** *பக்கங்கள்.*

எண் 23/2021—தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) நீக்கறவு சட்டம் .. .. .. 2-4

எண் 24/2021—தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம் .. .. 5-6

**2021-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 28 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2021**

2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டத்தை நீக்கறவு செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு

**1.** இந்தச் சட்டம், 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) நீக்கறவு சட்டம் என வழங்கப்பெறும்.

தமிழ்நாடு சட்டம் 37/2019–இன் நீக்கறவு

**2.** 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டம் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகின்றது. தமிழ்நாடு சட்டம் 37/2019

**நோக்கக் காரண விளக்கவுரை**

வேளாண் விளைபொருட்கள், கால்நடை மற்றும் அதன் உற்பத்தியை ஒப்பந்தப் பண்ணை மூலமாக மேம்பட்ட உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதலை வழங்குவதற்காக இயற்றப்பட்ட 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத் தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டமானது, (தமிழ்நாடு சட்டம் 37/2019) இதுவரையிலும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை. ஒப்பந்தப் பண்ணை என்பது உழவர் மற்றும் கொள்முதல் செய்பவர் விலை, அளவு, தரம் மற்றும் காலம் தொடர்பாக ஒருவருக்கொருவர் உடன்படும் சந்தைப்படுத்துதல் அணுகுமுறைகளுள் ஒன்றாகும். 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்துதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 27/1989) இம்மாநிலத்திலுள்ள வேளாண் உற்பத்தியினை வாங்குதல் மற்றும் விற்பனைசெய்தலின் ஒழுங்குமுறைக்கு வகை செய்கிறது. தற்போது வேளாண் சந்தைப்படுத்துதல் அமைப்பானது, உழவர்களுக்கு அதிக விலை மதிப்பீட்டிற்கு வகைசெய்கிறது. எனவே, சந்தைப்படுத்துதல் அமைப்பின் வகை ஒவ்வொன்றிற்காகவும் ஒரு சட்டமியற்றுவதற்கு மாற்றாக, சந்தைப்படுத்துதலின் வகை எதன்படியும் வேளாண் விளைபொருளின் வாங்குதல் மற்றும் விற்பனை செய்தலுக்கான ஒழுங்குமுறைகள் வழங்குவதன் மூலம் கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 27/1989–ஐ மேலும் வலுவூட்டுதல் உகந்ததென கருதப்படுகின்றது. எனவே, அரசானது, 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணை மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 37/2019) நீக்கறவு செய்வதென முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்,**
*வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர்,*

**சென்னை,**
2021 ஆகஸ்ட் 28.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

**2021—ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 28-ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2021**

**1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** **(1)** இந்தச் சட்டம் 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

**(2)** இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 4/1997

2–D ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** **1997** ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 2–D ஆம் பிரிவில், **(2)** ஆம் உட்பிரிவில், (a) ஆம் கூறுக்கு பின்பு, பின்வரும் கூறானது, புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(aa) மாவட்ட பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையின் துணை இயக்குநர்;"

**நோக்கக் காரண விளக்கவுரை**

**1997**ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவமனை நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் **4/1997**), பிரிவு **2–D**-யானது மருத்துவமனை நிறுவனங்களை பதிவு செய்தலின் பொருட்பாடுகளில் மாவட்டத்தின் தகுதிவாய்ந்த அதிகார அமைப்பிற்கு அறிவுரை வழங்கவும் அதனோடு தொடர்புடைய பிற கடமைகளைச் செயலாற்றவும் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகளின் துணை இயக்குநர் தலைமையின் கீழ்வரும், மாவட்டம் ஒவ்வொன்றிலும் மாவட்ட குழுவொன்றை உருவாக்குதலுக்கு வகை செய்கிறது. மாவட்ட பொது சுகாதார மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையின் துணை இயக்குநர், அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நல வசதிகளின் நிருவாக தலைவராக பணிபுரிவார் மற்றும் பொது சுகாதாரம் தொடர்பான பல்வேறு தொழில்நுட்ப மற்றும் நிருவாக செயல்களை நிறைவேற்றுவார். எனவே அரசானது, மாவட்ட அளவில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையின் துணை இயக்குநரையும், மாவட்டக் குழுவின் ஓர் உறுப்பினராக சேர்த்துக் கொள்ள முடிவு செய்துள்ளது. அதற்கிணங்கிய வகையில் மேற்சொன்ன சட்டத்தினை திருத்தம் செய்ய அரசானது முடிவு செய்துள்ளது.

**2.** இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**சென்னை–600 009,**
2021 ஆகஸ்ட் 28.

**மா. சுப்பிரமணியன்,**
*மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.*

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.